GSS

வினியோகஸ்தர்களுக்கான உலகளாவிய தரநிலைகள்

# பின்வருவனவற்றை அனைத்து வினியோகஸ்தர்களும் கடைபிடிக்க வேண்டும்:

HANES Brands Inc

## வேலைவாய்ப்பு நடைமுறைகள்:

பணியாளர்களை சமமாகவும் மதிப்பும் மரியாதையோடும் நடத்துவதற்கு HanesBrands உறுதிபூண்டுள்ளது.
இதே உறுதியைக் கொண்டுள்ள வினியோகஸ்தர்களுடன் வர்த்தகம் செய்யவே நாங்கள் விரும்புகிறோம்.
வினியோகஸ்தர்கள் பொருத்தமான அனைத்து சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க வேண்டும் என்றும் அனைவருக்குமான அடிப்படை மனித உரிமைகளை மதித்து நடக்க வேண்டும் என்றும் கோருகிறோம்.

## குழந்தைத் தொழிலாளர்கள்:

வினியோகஸ்தர்கள் தாங்கள் செயல்படும் நாட்டில் இருக்கும் கட்டாயப் பள்ளிப்பருவ வயது அல்லது சட்டப்பூர்வ பணியாளர் வயதிற்குக் குறைவாக உள்ளவர்களைப் பணியமர்த்தக் கூடாது.
மேலும், விளம்பரம் அல்லது ஊடகங்களில் நடிக்கும், பொருத்தமான குழந்தைத் தொழிலாளர் சட்டங்களால் பாதுகாக்கப்பட்ட குழந்தை நடிகர்கள் மற்றும் மாடல்களைத் தவிர, வேறு எந்தச் சூழ்நிலையிலும் வினியோகஸ்தர்கள் 15 வயதுக்கு உட்பட்ட பணியாளர்களைப் பணியமர்த்தக்கூடாது.

## ஊதியம்:

வினியோகஸ்தர்கள் குறைந்தபட்ச ஊதியம், மிகைப்பணிநேர மதிப்பூதியம், இதரப்படிகள், சலுகைகள் உள்ளிட்டவை தொடர்பான பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.
வினியோகஸ்தர்கள் சட்டப்பூர்வமாகப் பரிந்துரைக்கப்படும் குறைந்தபட்ச ஊதியம் அல்லது துறையில் தற்போது வழங்கப்படும் ஊதியம் இதில் எது அதிகமோ அதை ஊதியமாக வழங்க வேண்டும்
துறையில் தற்போது வழங்கப்படும் ஊதியம் இதில் எது அதிகமோ அதை ஊதியமாக வழங்க வேண்டும்
பணியாற்றும் அனைவருக்கும் நியாயமான ஊதியம் பெறுவதற்கு உரிமை உண்டு என்பதை HanesBrands அங்கீகரிக்கிறது
மேலும் பணியாளர்கள் பெறும் மொத்த ஊதியத்தின் (மிகைப்பணிநேர மதிப்பூதியம் தவிர்த்த பிற ஊதியம் மற்றும் போனஸ்கள் சலுகைகள்) மூலம் அவர்கள் தங்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடிய வேண்டும் என்பதையும் அதில் செலவழித்தது போக மிச்சத் தொகையை அவர்களால் சேமிக்க முடிய வேண்டும் என்பதையும் HanesBrands அங்கீகரிக்கிறது
வினியோகஸ்தர்கள் இதற்கு ஏற்ற வகையில் நியாயமான ஊதியத்தை வழங்குமாறு பரிந்துரைக்கிறோம்
இதைச் செய்ய முடியவில்லை என்றால் இதைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான அளவு ஊதிய நிலையை எட்டுவதற்கான ஆக்கப்பூர்வமான, பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வினியோகஸ்தர்கள் எங்களுடன் இணைந்து செயலாற்றலாம்.

## பாகுபாடின்மை:

ஒரு மனிதரின் இனம், நிறம், பாலினம், பிறந்த நாடு (அல்லது இனக்குழு), வயது, மதம், ஊனம், பாலியல் சார்பு, பாலின அடையாளம், அனுபவத்தின் நிலை, திருமண நிலை அல்லது பாதுகாக்கப்பட்ட பிற பண்புக்கூறுகள் அல்லது நம்பிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் பணியமர்த்துவது, ஊதியம் வழங்குவது, பதவி உயர்வு அளிப்பது, ஒழுங்குநடவடிக்கை எடுப்பது, பணியை விட்டு அகற்றுவது அல்லது ஓய்வளிப்பது போன்றவற்றில் பாகுபாடு காட்டக்கூடாது.

## கொத்தடிமைப் பணியாளர்கள்:

வினியோகஸ்தர்கள் கொத்தடிமைகள், சிறைவாசிகள் அல்லது கடனுக்கான கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தின் கீழ் பணியமர்த்தப்பட்டவர்கள் உள்ளிட்ட கட்டாயப்படுத்தப்பட்ட அல்லது தன்னிச்சையான ஊழியர் குழுவைப் பயன்படுத்தக்கூடாது.

### சங்கம் அமைத்தல் அல்லது கூட்டுபேரத்திற்கான சுதந்திரம்:

பணியாளர்கள் தங்களுடைய சுதந்திர சங்கத்தை அமைப்பதற்கான உரிமைக்கு வினியோகஸ்தர்கள் அங்கீகரித்து, மதிப்பளிக்க வேண்டும்.
அதே போல, பணியாளர்கள் தங்களுடைய கூட்டு பேரத்தைத் தேர்வுசெய்ய அல்லது தேர்வுசெய்யாமல் இருப்பதற்கான சுதந்திரத்தையும் வினியோகஸ்தர்கள் அங்கீகரித்து, மதிப்பளிக்க வேண்டும்.

## பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்:

வினியோகஸ்தர்கள் தங்களுடைய பணியாளர்களுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான பணிச் சூழலை ஏற்படுத்தித் தர வேண்டும்.
வினியோகஸ்தர்கள் பணியிடத்தில் பாதுகாப்பற்ற செயல்முறைகளையும் சூழ்நிலைகளையும் களைய உறுதியளிக்க வேண்டும், இதன் மூலம் அவர்கள் தங்களுடைய பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தீங்கு நேராமல் தவிர்க்க முடியும்.
பொருத்தமான சூழல்களில், இது தங்குமிடம் மற்றும் உணவு வசதியளிக்கும் இடங்களுக்கும் பொருந்தும்.

## பணியிடத் துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தல்:

வினியோகஸ்தர்கள் தங்களுடைய பணியாளர்களை உடல்ரீதியாக, வாய்மொழிரீதியாக, பாலியல்ரீதியாக அல்லது மனரீதியாகத் துன்புறுத்தக்கூடாது, மேலும் பணியாளர்களை ஒழுங்குபடுத்த உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் தண்டனை முறைகளைப் பயன்படுத்தக்கூடாது.

## வேலை நேரம்:

வினியோகஸ்தர்கள் வேலை நேரம் தொடர்பான அனைத்து பொருத்தமான சட்டங்களையும் விதிமுறைகளையும் கடைபிடிக்க வேண்டும்.
அசாதாரணமான சூழ்நிலைகள் தவிர்த்து, பணியாளர்கள் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பணிநேர வரம்புகள் அல்லது ஒரு வாரத்திற்கான வழக்கமான 48 மணிநேரம் + 12 மணிநேர மிகைப்பணி நேரம், இவற்றில் எது குறைவோ அதற்கு மேல் வேலை செய்யக்கூடாது.
பணியாளர்கள் தொடர்ந்து 6 வேலை நாட்கள் வேலை செய்தால், அவர்கள் குறைந்தபட்சம் அதற்கடுத்த 24 மணிநேரத்திற்குத் தொடர்ச்சியாக ஓய்வெடுக்க வினியோகஸ்தர்கள் அனுமதிக்க வேண்டும்.
மிகைப்பணி நேரத்தைத் தொடர்ச்சியாக வலியுறுத்தக்கூடாது, அது தன்னிச்சையாகக் கோரப்பட வேண்டும்.

## சுற்றுச்சூழல்:

சிறப்பான சுற்றுச்சூழல் நிர்வாகம் மூலமாக உலகம் முழுவதும் சுற்றுச்சூழலின் தரத்தைப் பாதுகாப்பதற்கான HanesBrands நிறுவனத்தின் உறுதிப்பாட்டைப் பகிர்ந்துகொள்ளும் வினியோகஸ்தர்களுடன் இணைந்து பணியாற்றுவதை HanesBrands விரும்புகிறது.
வினியோகஸ்தர்கள் சுற்றுச்சூழல் குறித்த பொருத்தமான அனைத்து சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும், அவற்றைப் பின்பற்றாத நடைமுறைகள் ஏதேனும் இருந்தால், அவற்றை சரிசெய்வதற்கான திட்டங்கள் அல்லது நிகழ்வுகளைக் கண்டிப்பாக உருவாக்கி, செயல்படுத்த வேண்டும்.
கழிவுகளைக் குறைக்க வினியோகஸ்தர்கள் முயற்சி செய்ய வேண்டும், அவர்களுடைய செயல்பாடுகளின் காரணமாக சுற்றுச்சூழலுக்கு ஏற்படக்கூடிய விளைவுகளைக் குறைந்தபட்சமாக்கி, அவற்றின் கடுமையைக் குறைக்கும் பொறுப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## ஊழல்தடுப்பு:

அயல்நாட்டு ஊழல் நடைமுறைகள் சட்டம் மற்றும் யூ.கே. ஊழல் சட்டம் உள்ளிட்ட அனைத்து பொருத்தமான சட்டங்களையும் HanesBrands கண்டிப்பாகப் பின்பற்றுகிறது, வினியோகஸ்தர்களும் அதையே செய்யுமாறு கோருகிறது.
HanesBrands -இன் வர்த்தக லாபங்களை அதிகரிப்பதற்காக வினியோகஸ்தர்கள் லஞ்சம் வழங்கக்கூடாது அல்லது ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.
இதில் உள்ளூர் அரசாங்க அலுவலர்கள், அரசியல் கட்சிகள், அரசு அலுவலகங்களுக்கான வேட்பாளர்கள் அல்லது தனிப்பட்ட நபர்களுக்கு, அரசாங்க அலுவலர்கள் அல்லது பிற தனிநபர்களின் செயல்கள் அல்லது முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக நேரடியாகவோ மறைமுகமாகவோ பணம் அல்லது அதற்கு ஈடான மதிப்புள்ள எதையும் வழங்குவது, வழங்குவதாக வாக்களிப்பது அல்லது வழங்குவதை அங்கீகரிப்பது போன்றவை உள்ளடங்கும்.



© 2022 Hanesbrands Inc. பாதுகாக்கப்பட்டவை அனைத்து உரிமைகளும்